பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 29 | வியாழக்கிழமை | 16.10.2025 | அதிர்வு 077 |
| --- | --- | --- | --- | --- | --- |


## மனுஷ நாணயக்கார பிணையில் விடுவிப்பு



இஸ்ரேலில் வேலை வாய்ப்புக்காக ஊழியர்களை அனுப்பும் பணியில் முறைகேடுகள் இடம் பெற்றன என முன்வைக்கப்பட்ட குற்றச் 06



# இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட செவ்வந்தி குழு

**மேலதிக விசாரணைக்காகச் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு**

பிரபல பாதாள உலகத் தலைவர் ‘கணேமுல்ல சஞ்சீவ’ கொலை தொடர்பில் நேபாளத்தில் கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி மற்றும் அவரது குழுவினர் நேற்று மாலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். 06








இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த நாளிலிருந்து இலங்கையில் சர்ச்சைக்குரிய அமைச்சராக இருப்பவர் வசந்த சமரசிங்க.

பிரதமர் ஹரிணி அமரசூரியவைத் தூக்கி அடிக்கும் விதத்தில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடுகின்றமை, மோசடி விவகாரங்களில் குற்றம் சுமத்தப்பட்டமை என்று பல சிக்கல்களில் அவ்வப்போது மாட்டி வருபவர்.

இப்போது தமது சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக அவர் சமர்ப்பித்த அறிக்கை சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தனது சொத்துக்களில் கிரிப்டோ கரன்ஸி (cryptocurrency) மூலம் சொத்து வைத்திருப்பதை அவர் பிரகடனப்படுத்தி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

கிரிப்டோகரன்ஸி (சுருக்கமாக ‘கிரிப்டோ’) என்பது ஒரு டிஜிட்டல் நாணயமாகும். இது ஒரு கணினி நெட்வொர்க் மூலம் செயல்பட வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கம் அல்லது வங்கி போன்ற எந்த மைய அதிகாரத்தையும் சார்ந்து 06



# தமிழகத்தில் அகதிகளாகத் தங்கி இருந்த 4 பேர் கடல் வழியாகத் தாயகம் திரும்பினர்

## தாமாகவே அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று சரண்



(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த நால்வர் கடல் வழியாகத் தாயகம் திரும்பி பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்தனர்.

மன்னாரைச் சேர்ந்த இவர்கள் இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக கடல்வழியாக படகில் சென்று தமிழகத்தில் அடைக்கலம் புகுந்து முகாமில் வசித்து வந்துள்ளனர்.

இலங்கையில் தற்போது போர் முடிவுற்று இயல்பு வாழ்வு திரும்புவதான செய்தியில் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு தமிழ் நாட்டில் இருந்து படகில் புறப்பட்டு மன்னாரை அடைந்துள்ளனர்.

இவ்வாறு மன்னார் வந்தவர்களை கடற்படையினரோ அல்லது பொலிஸாரோ கண்டுகொள்ளாதபோதும் தாமாக அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று விவரத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மன்னாரில் 28 பாகிஸ்தானியர்கள் கற்றாலையின் பணிக்காக வருகை

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்ட நகரின் அருகேயுள்ள சாவற்காடுக் கிராமத்தில் 28 பாகிஸ்தானியர்கள் தங்கி இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் அமைக்கப்படும் காற்றாலைத் திட்டத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் பெயரிலேயே பாகிஸ்தானியர்கள் இவ்வாறு தங்கியுள்ளனர்.

மன்னார் நகரின் மத்தியில் வைத்தியசாலைக்குப் பின்புறமாக உள்ள வீதியில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தியே இந்த 28 பாகிஸ்தானியர்களும் மன்னாரில் இடம்பெறும் உள்ளூர்ப் பணிகளிற்காக கடந்த ஓகஸ்ட் 7 ஆம் திகதி முதல் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தங்கி நிற்கும் பாகிஸ்தானியர்களை மன்னாரில் காற்றாலை அமைக்கும்

வின்ஸ்காப் என்னும் தனியார் நிறுவனமே அழைத்து வந்து தங்க வைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் நகரின் மத்தியில் மாவட்ட வைத்தியசாலைக்கு மிக அண்மையிலேயே தங்கியுள்ள இந்த பாகிஸ்தான் நாட்டவர்கள் உள்ளூரில் பணியாற்றுவது தொடர்பில் இவர்கள் நாட்டிற்குள் வரும்போது சுற்றுலா நுழைவு விசாவில் வந்தனரா அல்லது பணிக்கான நுழைவு விசாப் பெற்று வருகை தந்தனரா என ஒரு குழு ஆய்வில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகின்றது

இவ்வாறு தங்கியுள்ள 28 பாகிஸ்தானியர்களும் நிறுவனத்தால் அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பிரதமர் ஹரிணி இன்று இந்தியாவுக்கு பயணம்!



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதமர் ஹரிணி இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருப்பார்.

அவர் தனது விஜயத்தின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனும் உயர் மட்ட பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

நாளை என்.டி.ரி.வி மற்றும் சிந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஏற்பாடு செய்யும் என்.டி.ரி.வி உலக உச்சி மாநாட்டில், "நிச்சயமற்ற காலங்களில் ஏற்படும் மாற்றங்களை வழிநடத்துதல்" என்ற தலைப்பில் பிரதமர் சிறப்புரையாற்றவுள்ளார் என்று வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# யாழில் உருக்குலைந்த நிலையில் வயோதிபப் பெண் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம் – அளவெட்டிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாலச்சந்திரன் உமாதேவி (வயது 74) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவர் வசித்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து, அயல்வீட்டார்கள் கிராம அலுவலருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து, பொலிஸாரின் உதவி பெறப்பட்டு, உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டது.

மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



# சபரகமுவ பாடசாலைகளுக்கு தீபாவளிக்கு மறுநாள் விடுமுறை

தீபாவளிக்கு மறுதினமான எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபரகமுவ மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது குறித்து பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சிக்கு விடுத்த ஆலோசனைக்கமைய இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் 21 ஆம் திகதி தமிழ் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்படுவதால் அதற்குப் பதிலாக எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் நடத்தப்படும் என்று சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சி தெரிவித்துள்ளார்.

# கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கை சரிவை சந்தித்தது

2025 ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இலங்கை கடவுச்சீட்டு சரிவை சந்தித்துள்ளது.

இலங்கை கடவுச்சீட்டு, கடந்த ஆண்டை விட 6 இடங்கள் பின்தங்கி 98 ஆவது இடத்துக்கு சென்றுள்ளது.

ஆண்டின் தொடக்கத்தில், பல்வேறு காரணிகளால் இலங்கை கடவுச்சீட்டு பின்தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# சங்குப்பிட்டியில் சடலம் மீட்பு: இரு சந்தேகநபர்கள் கைது!




யாழ்ப்பாணம், சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகாமையில் பெண்ணொருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்ட நிலையில், சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் பகுதியைச் சேர்ந்த, 2 பிள்ளைகளின் தாயாரான சுரேஷ்குமார் குலதீபா (வயது 36) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சடலத்தின் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகளில் அவர் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்ற விடயம் தெரியவந்தது. இதையடுத்து மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையிலேயே தற்போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் பெண் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்க அமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.






# தெற்கு கடலில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் பிரதான கடத்தல்காரர் ஒருவருக்கு சொந்தமானது

தங்காலை கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் தென் மாகாணத்திலுள்ள பிரதான போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவருக்கு சொந்தமானதென பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி போதைப்பொருள்கள் 04 படகுகளில் இலங்கை கடற்பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

படகுகள் கரையோர தொடர்பாடலை துண்டித்து கடற்கரைக்குள் உள்நுழைந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாதுகாப்பு படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு அஞ்சி போதைப் பொருள்களை கடலில் கைவிட்டுவிட்டு படகுகளில் திரும்பியுள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

இதற்கமைய, கடலில் மிதந்தவாறு காணப்பட்ட 51 உரப்பைகள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு தங்காலை மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டன.

இந்த உரப்பைகளில் இருந்து 856 கிலோகிராம் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 670 கிலோகிராம் ஐஸ், 156 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 12 கிலோகிராம் ஹஷீஷ் போதைப் பொருள் என்பன காணப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்திருந்தனர்.

இந்த போதைப்பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.









# மழை காரணமாக 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு



வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீட்டர் அளவிலான பலத்த மழை பெய்யலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்னல் தாக்கம் மற்றும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக கடும் காற்று வீசக்கூடுமென்பதுடன் இதன்போது ஏற்படும் அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கண்டி, கேகாலை, பதுளை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய 07 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பசறை – ஆகரத்தென்ன பகுதியில் அமைந்துள்ள மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறும் இடத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லை. அதை நிலைநிறுத்தவோ பராமரிக்கவோ முடியாது. இருப்பினும், ஸ்டேபிள்கொயின் எனப்படும் ஒரு வகை கிரிப்டோகரன்ஸி, நிலையான மதிப்பை நிலைநிறுத்திப் பராமரிக்க வேண்டும் என்று கோருவதற்கு அந்தந்த நாட்டு அரசாங்க நடவடிக்கை அல்லது சட்டத்தை நம்பியிருக்கலாம்.

ஆனால் கிரிப்டோகரன்ஸி இலங்கையில் சட்ட பூர்வமானதல்ல. ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட அல்லது அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நாணயம் என்ற அர்த்தத்தில் இங்கு அது சட்டப்பூர்வமானது அல்ல. குறிப்பிட்ட தடை எதுவும் இல்லை என்றாலும், இலங்கை மத்திய வங்கி ஒழுங்குபடுத்தப்படாத டிஜிட்டல் நாணயங்களின் அபாயங்கள் குறித்து எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது. இலங்கை ரூபா மட்டுமே சட்டப்பூர்வமான டெண்டர் என்றும், கிரிப்டோ தொடர்பான எந்த வணிகங்களும் அங்கீகரிக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளது.

ஆயினும், இந்தியாவில் கிரிப்டோகரன்ஸி சட்டப்பூர்வமானது. இருப்பினும் அது அங்கு ஒழுங்குபடுத்தப்படவில்லை. அங்கு அரசாங்கம் அந்த நாணயம் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்று கூறப்படுகின்றது. இந்திய ரிசர்வ் வங்கி முன்பு இந்திய வங்கிகள் கிரிப்டோ பரிவர்த்தனைகளுக்கு சேவை செய்வதைத் தடை செய்தது. இந்திய உச்ச நீதிமன்றம் 2020 இல் தடையை நீக்கி, பரிமாற்றங்கள் செயல்பட அனுமதித்தது. கிரிப்டோகரன்ஸியை சட்டவிரோதமாக்கும் குறிப்பிட்ட சட்டம் எதுவும் இல்லை என்றாலும், அரசாங்கம் அதன் பயன்பாட்டிற்கு எதிராக எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும் கிரிப்டோகரன்ஸிகளைத் தடை செய்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள மசோதா, பரிமாற்றங்கள் மற்றும் வர்த்தகர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் வசந்த சமரசிங்க கிரிப்டோகரன்ஸியில் சொத்து வைத்திருப்பது குறித்து ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவிடம் கேட்கப்பட்டது. சமாளிப்புப் பதில் ஒன்றை அவர் கூறியிருக்கின்றார்.

“இலங்கையில் பலர் இதில் (கிரிப்டோகரன்ஸியில்) ஈடுபட்டுள்ளனர். எனவே, இது சட்டத்தால் தடைசெய்யப்பட்ட ஒன்றல்ல. இது தடைசெய்யப்பட்டிருந்தால், நிச்சயமாக, மக்கள் அதைச் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். இப்போது கேள்வி என்னவென்றால், சகோதரர் வசந்தா அல்லது நம்மில் யாராவது நமது சொத்துக்களை – ஒரு சதத்தை கூட – மறைத்து வைத்திருக்கின்றோமா என்பதுதான். சிலர் சில விஷயங்களைச் சேர்க்க வேண்டாம் என்று தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்த வரை, மறைக்க எதுவும் இல்லை. கிரிப்டோகரன்ஸி மற்றும் அது போன்ற விஷயங்கள் – அவற்றை மறைக்க வேண்டிய அவசியமில்லை. மறைக்க எதுவும் இல்லை, எனவே நாங்கள் எல்லாவற்றையும் அறிவித்துள்ளோம்.”

“சட்டவிரோதமாக ஏதாவது இருந்தால், நடவடிக்கை எடுப்பது சட்டத்தின் பொறுப்பு. அதைப் பற்றி பேஸ்புக்கில் எழுதுவது எதையும் சாதிக்காது. இந்த சொத்துக்கள் சட்டவிரோதமானது என்று யாராவது நம்பினால், அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் உடனடியாக குற்றப் புலனாய்வுத் துறைக்கு புகார் அளிக்க வேண்டும். அதிகாரிகள் விசாரிப்பார்கள். ஆனால் பேஸ்புக்கில் இடுகையிடுவதற்கு உண்மையான அர்த்தம் இல்லை, இது என் கருத்து.” – என்றார் ரில்வின் சில்வா.

அமைச்சர் வசந்த சமரசிங்கவின் சொத்து விடயம் இன்னும் சில நாள்களுக்கு தென்னிலங்கை அரசியலில் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

## மனுஷ நாணயக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாட்டுகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் நேற்று புதன்கிழமை காலை வாக்குமூலம் அளிக்க அவர் ஆஜரானபோது கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் நேற்று மாலை அவர் கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிவான் பிணை வழங்க உத்தரவிட்டார்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து சுட்டுக் படுகொலை செய்யப்பட்ட “கணேமுல்ல சஞ்சீவ” கொலையின் பிரதான சூத்திரதாரி எனக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி நேபாளத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான ஜே.கே. பாய், தக்ஷி மற்றும் சுரேஷ் உள்ளிட்ட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட ஐந்து பேரையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் இரு அதிகாரிகள் நேற்றுக் காலை நேபாளம் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மாகாண சபைத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது?

## யாழில் தமிழ்க் கட்சிகள் கலந்துரையாடல்

(எஸ்.நிதர்ஷன்)

வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகப் போட்டியிட்டு எவ்வாறு வடக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவது என்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜாப்பெருமாள் தலைமையில் இந்தக் தமிழ்க் கட்சிகளின் கூட்டம் இடம்பெற்றது.

இதில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முருகேசு சந்திரகுமார், வேந்தன் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கலந்துகொள்ள அதன் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர் சுகயீனம் காரணமாக வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவரும் வரவில்லை எனக் கூறப்பட்டது.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கோட்டை விடப்படும் வாய்ப்பு

இலங்கை அரசியலில் அர்த்தமுள்ள விதத்தில் இப்போது பேசப்படுகின்ற முக்கிய விவகாரம் இன்னும் மூன்று ஆண்டுகளில் சர்வதேச நாடுகளுக்குத் தான் வழங்க வேண்டிய கடன்களுக்கான நிலுவையை இலங்கை மீண்டும் செலுத்தத் தொடங்க வேண்டும் என்பதுதான்.

வருடாந்தம் 5 பில்லியன் டொலர் கடன் தொகை மீளளிப்பை இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் நாடு திரும்பச் செலுத்தத் தொடங்க வேண்டும். அதாவது வருடத்துக்கு சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபா பணத்தைக் கடன் தவணைக் கட்டணம் என்ற பெயரில் நாடு நேரத்துடனேயே ஒதுக்கி வைக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் அது நமது நாட்டுக்குச் சாத்தியமான விடயமாகத் தெரியவில்லை.

இந்தப் பத்தியில் நாம் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டுவது போல இந்தக் கடன்களுக்கான தவணைக் கட்டணங்களை மீளச் செலுத்துவதானால், நாடு இறக்குமதிப் பொருளாகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் அது குறித்துத் தற்போதைய அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அந்நிய செலாவணி ஈட்டலுக்கு முக்கிய உதவித் திட்டமாக நமக்கு கிடைத்திருப்பது ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஜி.எஸ்.பி. பிளஸ் (பொதுவான முன்னுரிமை திட்ட பிளஸ்) வரிச் சலுகையாகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு வரிச்சலுகை அடிப்படையில் ஏற்றுமதி செய்வதற்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மற்றைய ஏற்றுமதி நாடுகளுடன் போட்டி போட்டு, இலங்கை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்யவும், அதன் மூலம் அந்நிய செலாவணியை சுலபமாக அதிகம் ஈட்டவும் முடியும்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய இந்தச் சலுகையை நாடு சரியாகப் பயன்படுத்தவில்லை என்று இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

6,000 வரி விடயங்களில் இலங்கை தன் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர். ஆனால் அவற்றில் 54 ஐ மட்டுமே இலங்கை இதுவரை பயன்படுத்துகின்றது என தகவல்கள் வெளியாகி உள்ளன

இலங்கையின் உற்பத்தித் தளம் தற்போது குறைவாக இருப்பதால், ஏற்றுமதிக்கான பெரும்பாலான வரிச் சலுகை வகைகளை இலங்கையால் அதிகபட்சமாகப் பயன்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் 27 நாடுகளையும் 450 மில்லியன் நுகர்வோரையும் கொண்ட ஒரு பிராந்தியமாகும். 2023 ஆம் ஆண்டில் இது இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக இருந்தது. வர்த்தக அளவு 3.84 பில்லியன் யூரோக்கள். அதாவது 2.56 பில்லியன் யூரோக்கள் ஏற்றுமதி மற்றும் 1.28 பில்லியன் யூரோக்கள் இறக்குமதி.

சுனாமி பேரழிவுக்குப் பிறகு, 2005 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வரிச் சலுகை வசதி வழங்கப்பட்டது, இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்தில் உள்ள சந்தைகளுக்கு 6,000 வரிக் கோடுகளின் கீழ் இலங்கை அதன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்ய முடியும்.

தற்போது, இலங்கை இந்தப் பிராந்தியத்தில் உள்ள சந்தைகளுக்கு ஆடைப் பொருள்கள், ரப்பர் பொருள்கள் மற்றும் தேயிலை போன்றவற்றையே ஏற்றுமதி செய்கிறது. சந்தைகள் முக்கியமாக ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் அமைந்துள்ளன.

ஆனால், ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்பு இருந்தும் அதைப் பயன்படுத்தாத நாடாக இலங்கை இருப்பதுதான் விசனத்துக்குரியது.

# கரூர் கூட்ட நெரிசல் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி



கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் நேற்று விளக்கம் அளித்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

“இந்த சம்பவத்தை விசாரிக்க செப்ரெம்பர் 28 ஆம் திகதி ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த 3 ஆம் திகதி ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு இந்த சம்பவத்தை சட்டப்படி விரைந்து கையாண்டது. அனுமதி வழங்கல், மருத்துவ உதவி, நிவாரண உதவி அனைத்தும் சரியான முறையில் நடந்தன. இதுபோன்ற துயரங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மேல் முறையீட்டு வழக்கில் இவ்விழக்கு சி.பி.ஐ. விசாரணைக்காக ஒப்படைக்கப்பட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நான் எனது 50 ஆண்டு கால பொது வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளை பார்த்திருக்கிறேன். நடத்தியும் இருக்கிறேன். இங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இத்தகைய அனுபவம் கொண்டவர்கள் தான். மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தும் போது அதற்குரிய சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் பொது ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அப்படித்தான் நடத்த வேண்டும்.

கட்டுப்பாடுகள் மீறப்படும்போது அதனால் பாதிக்கப்படுவது நிகழ்ச்சிகளை நடத்தும் கட்சியின் தொண்டர்கள் தான், நமது தமிழ்நாடு மக்கள்தான். சமூக வலைதளங்களில் தேவையற்ற வதந்திகள் பரவியபோது அதற்கு முற்றுப்புள்ளி வைக்க காணொலி மூலமாக எந்த அரசியல் கட்சித் தலைவரும் தன் கட்சித் தொண்டர்களும் அப்பாவி பொது மக்களும் இறப்பதை விரும்ப மாட்டார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன். இறந்தவர்கள் நமது உறவுகள் என்பதை மனதில் வைத்து அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

அதுமட்டுமின்றி, அரசின் உயர் அலுவலர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் செய்தியாளர்களை சந்தித்து உண்மைகளை காணொலி ஆதாரத்தோடு தெளிவுபடுத்தினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவரையும் காத்தது நமது அரசு. அனைவருக்கும் உரிய சிகிச்சை அளித்தது நமது அரசு.

உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்பதை உறுதியோடு நான் சொல்கிறேன். அதேநேரத்தில் இதுபோன்ற துயர சம்பவங்கள் இனி நடக்கக்கூடாது என்ற உறுதியை அனைத்து அரசியல் இயக்கங்களும் பொது அமைப்புகளும் எடுக்க வேண்டும். அனைத்தையும்விட மக்களின் உயிரே முக்கியம், மக்களின் உயிர் விலைமதிப்பற்றது. இதை மனதில் கொண்டு செல்பட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

# கரூர் விவகாரம் பற்றி பேசினால் ஆளும் கட்சிக்கு ஏன் பதற்றம்

## எடப்பாடி பழனிச்சாமி

“கரூர் விவகாரம் பற்றி பேசினால், ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம். இந்த விவகாரத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புக்கு பாதுகாப்புக் குறைபாடே காரணம்.”

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான நேற்று , கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விவாதம் நடந்தது. கரூர் கூட்டநெரிசல் குறித்த சட்டப்பேரவையில் நடந்துகொண்டிருந்த விவாதத்தின் போது, தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை குறிப்பிட்டு எடப்பாடி பழனிச்சாமி மீது அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் குற்றச்சாட்டு வைத்தார். இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகர் இருக்கையின் முன் அமர்ந்து எடப்பாடி பழனிசாமி போராட்டத்தில் ஈடுபட்டார்.

தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள், அரசுக்கு எதிராக முழுக்கமிட்டபடி பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர், சட்டப்பேரவையில் இருந்து அ.தி.மு.க, பா.ஜ.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“த.வெ.க. தலைவர் மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் பத்து நிமிடம் தான் பேசியிருப்பார், அப்போது ஒரு செருப்பு வந்து அங்கு விழுகிறது. இது குறித்து அரசு ஒரு விளக்கமும் அளிக்கவில்லை. கரூரில் 500 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக ஏ.டி.ஜி.பி. கூறினார். 660 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக முதல்வர் கூறுகிறார். இதிலேயே முரண்பாடு இதனால்தான் கரூர் சம்பவத்தில் அரசின்மீது சந்தேகம் எழுகிறது. கரூர் சம்பவத்துக்கு அரசின் அலட்சியமே காரணம். எவ்வளவு பேர் கூடுவார்கள் என உளவுத்துறைக்கு தெரிந்திருக்கும். ஆனாலும் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை.

சட்டப்பேரவையில், பேச முடியாததை இப்போது செய்தியாளர்களிடம் பேசுகிறேன். ஜனவரியில் அ.தி.மு.க. கூட்டம் நடத்த கரூர் வேலுச்சாமிபுரத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு சென்ற பிறகே எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எங்களுக்கு நிராகரித்த இடத்தை த.வெ.க.வுக்கு எதற்காக அரசு கொடுத்தது? கரூர் சம்பவத்தில் அசம்பாவிதம் நடக்க வேண்டும் என திட்டமிட்டு அவ்விடத்தை கொடுத்ததாக மக்களும் சந்தேகிக்கின்றனர். ஏதோ உள்நோக்கத்தோடு தான் இந்த இடம்



கொடுக்கப்பட்டது. பொலிஸாரின் கவனக் குறைவே கூட்ட நெரிசலுக்கு காரணம். எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்திருந்தால், இப்படி நடந்திருக்காது.

கரூர் விவகாரத்தில் நாங்கள் அரசியல் செய்யவில்லை. மக்களுக்காகவே பேசுகிறோம். கரூர் விவகாரம் பற்றி பேசினால், ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம்?. இந்த விவகாரத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதனால் தான் நான் பேசும்போது, ஒவ்வொரு அமைச்சரும் எழுந்து பதில் சொல்கிறார்கள். கரூர் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணையை நினைத்து ஆளும்கட்சி பயப்படுகிறது. எல்லா விஷயத்திலும் அரசியல் செய்யும் கட்சி தி.மு.கதான்.” என்றார்.




# ஹமாஸ் உறுதிமொழிகளை நிறைவேற்ற தவறிவிட்டதாக இஸ்ரேல் குற்றச்சாட்டு

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் ஹமாஸ் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக இஸ்ரேலிய அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தீர்க்கப்படாவிட்டால் காசாவுக்கு வழங்கப்படும் உதவிகளில் பின்னடைவுகள் ஏற்படலாம் என இஸ்ரேல் அச்சுறுத்தியுள்ளது.

எனினும், உலக அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி இன்னுமொரு போர் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் ஜனநாயகப் போராட்டங்கள் ஊடாக தீர்வுகளை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடுகின்றர்.

இதனிடையே, காசா பேரழிவால் உடல்களைக் கண்டுபிடித்து திருப்பி அனுப்புவது கடினமாகிறது என செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

## காசாவில் இருந்து பிணைக் கைதிகள் விடுவிப்பு;

# 738 நாள்களுக்குப் பின்னர் ஒன்று சேர்ந்த இளம் தம்பதி



இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், பணயக்கைதிகள் பலரும் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு பணயக்கைதிகளினதும் வாழ்க்கை என்பது பல்வேறு கதைகளை சுமந்ததாக உள்ளது.

பணயக்கைதிகளின் விடுவிப்புகளையடுத்து அவர்கள் தங்களது குடும்பங்களுடன் இணைந்து கொள்ளும் நெகிழ்ச்சி சம்பவங்கள் உலக வாழ் மக்கள் மத்தியில் இடம்பிடிக்கின்றன.

அந்த வகையில், இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போரின் போது சிறைபிடிக்கப்பட்ட தம்பதியினர் இரண்டாண்டுகள் கழித்து ஒன்று சேர்ந்துள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின் போது இருவரும் கடத்தப்பட்டனர்.

அதன் பின்னர், இருவரும் தனித் தனியாக பல்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு இரண்டாண்டுகளாக எந்த தொடர்பும் இல்லாமல் வாழ்ந்துள்ளனர்.

ஆனால் சமீபத்திய விடுவிப்புகள் மூலம் அவர்கள் தற்போது மீண்டும் சந்திக்க முடிந்தது.

இது அவர்களது குடும்பத்தினருக்கு மட்டுமின்றி, இஸ்ரேல் மக்களுக்கும் உணர்ச்சிப்பூர்வமான தருணமாக அமைந்துள்ளது.

தற்போது, அந்த தம்பதியரின் நலனை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, இந்த தம்பதி அமெரிக்க ஜனாதிபதிக்கும் நன்றி தெரிவித்துள்ளது.





# பங்களாதேஷ் ஆடை தொழிற்சாலையில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 16 பேர் பலி!

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட பாரிய தீப்பரவலையடுத்து, 16 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

டாக்காவின் மிர்பூர் பகுதியில் உள்ள நான்கு மாடிக் கட்டடத்தில் இயங்கிவந்த இந்த ஆடைத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் நண்பகல் வேளையில் தீப்பரவல் ஏற்பட்டது.

மூன்று மணி நேர முயற்சியின் பின்னர் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், அதற்கு அருகிலிருந்த இரசாயனக் களஞ்சியத்தில் தீப்பரவல் தொடர்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 16 உடலங்கள் மீட்கப்பட்டுள்ள போதிலும் அவை அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகியுள்ளன என தீயணைப்பு சேவை தெரிவித்துள்ளது.

அருகில் இருந்த இரசாயனக் களஞ்சியத்தில் பிளாஸ்டிக் மற்றும் ஹைட்ரஜன் பெரோக்சைட்டு போன்ற தீயை தீவிரமாக்கும் பொருட்கள் சேமிக்கப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

இந்த இரசாயனங்கள் எரியும்போது வெளியாகும் நச்சு வாயுவை சுவாசித்ததாலேயே பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக இறந்திருக்கலாம் என தீயணைப்பு சேவையின் பணிப்பாளர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இந்த தொழிற்சாலை மற்றும் களஞ்சியசாலையின் உரிமையாளர்களைக் கண்டறியும் நடவடிக்கையிலும், குறித்த களஞ்சியசாலை சட்டப்பூர்வமாக இயங்கியதா என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.







# மன்னார் நகரசபையினதும் மாவட்ட செயலகத்தினதும் முடிவுக்கு எதிராகப் போராடத் தயாராகும் சாந்திபுரம்!

**(மன்னார் நிருபர்)**



மன்னார் நகரசபை பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை கொட்டுவது தொடர்பில் தொடர்ச்சியாக மன்னார் நகரசபை மற்றும் மாவட்ட செயலகம் ஆகியவற்றுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கழிவகற்றல் வாகனங்கள் கழிவுகளுடன் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் மன்னார் தள்ளாடிப் பகுதியில் மக்கள் வசிக்காத இடத்தில் கழிவுகளை கொட்டுவதற்கு அனுமதி கோரப்பட்ட நிலையில் அந்த இடத்தில் அனுமதி வழங்காது தற்போது மன்னார் சாந்திபுரம், சௌத்பார், தரவான்கோட்டை பகுதியின் மத்தியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான ஒரு காணியில் ஐந்து வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் குப்பைகளை கொட்டுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் அந்தக் குப்பைகளை தமது கிராமத்துக்குள் ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என சாந்திபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முன்னதாகவே சாந்திபுரம் பகுதியில் நகர சபைக்கு சொந்தமான காணியில் நகரசபையினால் குப்பைகள் கொட்டப்பட்டபோது மக்கள் ஒன்று திரண்டு வீதிகளை மறித்து போராட்டம் மேற்கொண்ட நிலையில் அந்தச் செயல்பாடு நகரசபையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் நகர சபைக்கு சொந்தமான காணிக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் குப்பைகளை கொட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மழை காலம் என்பதாலும், குப்பைகளை கொட்டத் திட்டமிடப்பட்ட பகுதிக்கு அருகில் உள்ள கிராமங்கள் அடிக்கடி வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகும் என்ற அடிப்படையிலும் இதனால் தொற்று நோய்களும் ஏற்படும் ஆபத்து காணப்படுவதால் இந்த தீர்மானத்தை உடனடியாக நிறுத்துமாறு சாந்திபுரம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு இல்லாமல் மக்கள் விருப்பத்துக்கு மாறாக குப்பைகளை கொட்டினால் மக்களைத் திரட்டிப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் .

அதே நேரம் தமது கோரிக்கை மற்றும் ஆதங்கங்கள் அடங்கிய மகஜர் மன்னார் நகர சபையிடமும் ஒப்படைத்துள்ளனர்.



# குருந்தூர்மலையை மகாவம்சத்துடன் தொடர்புபடுத்தி காட்சிப்படுத்தப்பட்டுள்ள போலி வரலாற்றுப் புனைவு!

## தொல்லியல் திணைக்களத்தை வன்மையாகச் சாடுகின்றார் ரவிகரன் எம்.பி.








(பா.சதீசன்)

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையை பௌத்த வரலாற்றுடனும், பௌத்த வரலாற்று நூலான மகாவம்சத்துடனும் தொடர்புபடுத்தி போலியான வரலாற்றுத் தகவல்கள் புனையப்பட்ட காட்சிப்பலகைகள் குருந்தூர் மலைப் பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குருந்தூர் மலைப்பகுதிக்கு நேற்று நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்ட பின்னர் இதனைத் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் இத்தகைய கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாட்டிற்குத் தனது வன்மையான கண்டனங்களையும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

குருந்தூர்மலையில் சில விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதான அறிவித்தல் கிடைக்கப்பெற்றது. அதற்கமையவே இப்பகுதிக்கு வருகை தந்தேன்.

ஏற்கனவேயும் தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை பௌத்த இடமென விவரிக்கும் வகையில் காட்சிப்பலகைகள் குருந்தூர்மலை அடிவாரத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் 14.10.2025அன்று புதிதாக"குருண்டிதொல்லியல்தளம்"எனத் தலைப்பிடப்பட்டு போலியான பௌத்த வரலாறுகள் புனையப்பட்ட காட்சிப. பலகைகள் தொல்லியல் திணைக்களத்தினால் குருந்தூரமலையின் அடிவாரம், குருந்தூர் மலையின் மேற்பகுதி மற்றும் குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமாக மொத்தம் நான்கு இடங்களிவ் நிறுவப் பட்டுள்ளன. இவ்வாறான போலியான வரலாற்று புனைவுகளை இங்கு நிறுவுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

குறிப்பாக எமது தமிழ் மக்கள் இந்தக் குருந்தூர்மலையை அண்டியுள்ள தண்ணிமுறிப்பு பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்தமையுடன், இந்தக் குருந்தூர்மலையில் அமைந்திருந்த ஆதிசிவன் ஐயானாரை வழிபட்டுவந்துள்ளனர். இதுவே தண்ணிமுறிப்பினதும் குருந்தூர் மலையினதும் வரலாறாக இருக்கின்றது. இந்நிலையில் இந்த தண்ணிமுறிப்புப் பகுதியில் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்த எமது தமிழ் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இத்தகைய சூழலில் தமிழர்களுடைய பூர்வீக வாழிடமான தண்ணிமுறிப்பையும், குருந்தூர்மலையையும் மகாவம்சத்துடனும், பௌத்த வரலாறுகளுடனும் தொடர்புபடுத்தி தொல்லியல் திணைக்களத்தினால் போலியானதொரு வரலாறு புனையப்பட்டு காட்சிப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறாக போலியான வரலாறுகளைப் புனைந்து காட்சிப்பலகைகளை காட்சிப்படுத்துவது தொல்லியல் திணைக்களத்தினுடைய பணியில்லை. தொல்லியல் திணைக்களமென்றால் இந்தநாட்டில் சிங்கள மக்கள், தமிழ்மக்களென்ற வேறுபாடின்றி வரலாறுகளை ஆராய்ந்து உண்மையான வரலாறுகளைப் பதிவு செய்யவேண்டும்.

ஆனால் இலங்கையிலுள்ள தொல்லியல் திணைக்களம் பௌத்தர்களுக்கு சார்பாக போலியான வரலாற்றுப் புனைகதைகளை உருவாக்குவது மற்றும் காட்சிப்படுத்துகின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றது. இவ்வாறாக எம் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை மற்றும் அதனை அண்டிய சகல இடங்களும் எமது தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்களாகும்.

தற்போதும் தொல்லியல் திணைக்களத்தால் அடாவடியாக ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலெல்லாம் தமிழ் மக்களே பயிர்ச்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக குருந்தூர்மலையைச்சூழவுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 300ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் தொல்லியல் திணைக்களத்தினால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளன. இவ்வாறு தொல்லியல் திணைக்களம் பாரிய அளவில் எமது தமிழ் மக்களின் குடியிருப்பு மற்றும் பயிர்ச. செய்கைக் காணிகளையும் அபகரித்து வைத்திருப்பதற்கு எந்த அவசியமும் இல்லை. எனவே அந்தக் காணிகளும் விடுவித்து எமது தமிழ் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும். எமது தமிழ் மக்கள் தண்ணிமுறிப்பில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்றே நாம் தொடர்சியாக கோரிவருகின்றோம்.

எமது பூர்வீக தாயகத்தில் நாம் எமது வரலாறு, பண்பாடு, கலாச்சாரம்,வாழ்வியல் வழிபாட்டு அம்சங்களுடன் நிறைவாக வாழ்வதையே விரும்புகின்றோம். ஆனால் எமது கட்டமைப்புக்களைச் சீர்குலைக்கின்ற வகையிலேயே கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகளை தொல்லியல் திணைக்களம் தொடர்ச்சியாகச் செயற்பட்டுவருகின்றது.

தொல்லியல் திணைக்களம் போலியாக வரலாறுகளைப் புனைந்துள்ள மகாவம்சக் காலத்திற்கு முன்பிருந்தே எமது தமிழர்கள் ஆண்ட இடங்களாக இந்த இடங்கள் காணப்படுகின்றன.

இந்த நாடு பெரும்பான்மை பௌத்தர்களின் ஆட்சியின் கீழ் இருக்கின்றதென்பதற்காக, பெரும்பான்மை பௌத்தர்களுக்கு ஏற்றவர்களுக்கு போலியான வரலாறுகளைப் புனைந்து தமிழர்களின் பூர்வீக வரலாற்றிடங்களைத் திட்டமிட்டு ஆக்கிரமிப்புச் செய்வதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. தொல்லியல் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மேலும் இந்த குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளைகளையும் மீறி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு பொறுப்பாகவுள்ள தேரரும் இவ்வாறான அபகரிப்பு மற்றும் பௌத்த வரலாற்று புனைவுச் செயற்பாடுகளுக்கு முழு ஆதரவுடன் இயங்குகின்றார் என அறிகின்றோம். இவ்வாறாக பௌத்த துறவியாக இருப்பதற்கு அடிப்படைத் தகுதியே இல்லாத ஒருவரையே இங்கு பொறுப்பாக நியமித்துள்ளனர். அவருடைய அத்துமீறல்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு எனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இத்தகைய வரலாற்றுப்புனைவுகளூடாக மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகள் தொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் எம்மாலான சகலநடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படும் – என்றார்.

# பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு சத்தியலிங்கம் எம்.பி நேற்று களவிஜயம்







மன்னார் மாவட்டத்தின் பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்றுக் களவிஜயம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்.

இதன்போது வைத்தியசாலையின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் பொதுமக்களையும் சந்தித்து வைத்தியசாலையின் தேவைப்பாடுகள், பிரச்சினைகள் மற்றும் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவேண்டிய எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் அவர் கலந்துரையாடினார்.

மேலும், அவர் முன்னர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக சேவையாற்றியபோது பேசாலை பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைத்துக்கொடுத்த வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தொகுதியையும் பார்வையிட்டு அதன் மேலதிக தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து வைத்தியசாலையில் உள்ள மேலும் பல வைத்தியப் பிரிவுகளை பார்வையிட்டமையுடன், பயன்படுத்தப்பட முடியாதுள்ள கட்டடங்களையும் பார்வையிட்டிருந்தார். அத்துடன் அங்கு பணியாற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெறும் பொதுமக்கள் ஆகியோருடனும் கலந்துரையாடினார்.

முன்னிலைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டுசென்று விரைவான நடவடிக்கையெடுப்பார் என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு தெரிவித்திருந்தார்.

# சிறந்த கட்டுரை எழுத்தாளருக்கான விருது சுபேசனுக்கு







குரு ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியான சிறந்த ஊடகர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை – சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதன்போது பத்திரிகை,வானொலித் துறைகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஊடகவியலாளர்களுக்கு தனிப்பட்ட பிரிவுகளின் அடிப்படையில் விருது வழங்கி வைக்கப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் தவராசா சுபேசனுக்கு 2025ஆம் ஆண்டிற்கான சிறந்த கட்டுரை எழுத்தாளர் விருது வழங்கி குரு ஊடக வலையமைப்பு கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடக அடையாள அட்டை இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நுழைவு தடை!

## கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் புதிய உத்தரவு




**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசபை அமர்வுக்கு செய்தி சேகரிப்பதற்காக வருமிடத்து, மாவட்ட ஊடக அமையத்தின் ஊடாக உறுதிப்படுத்தி முன் அனுமதி பெற்றாலேயே உள்ளே வர முடியும் என பிரதேசசபை தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரன் புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

இன்று ஒக்டோபர் 16 ம் திகதி நடைபெறவுள்ள பிரதேசசபை அமர்விற்கு செய்தி சேகரிக்க செல்வதாயின் இரண்டு நாள்களுக்கு முன்னரே அனுமதி பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோன்ற காரணத்தால் கடந்த மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற அமர்விலும் ஊடகவியலாளரை தவிசாளர் திருப்பி யனுப்பியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கரைதுறைப் பற்று பிரதேச சபைத் தவிசாளரால் ஊடக வியலாளருக்கு அனுப்பப்பட்ட குறுஞ் செய்தியில், "தாங்கள் ஊடகவியலாளர் என்கின்ற உறுதிப்படுத்தலை மாவட்ட ஊடக அமையத்தின் ஊடாக உறுதிப்படுத்தலுடன் தரவுகளை சமர்ப்பிக்க வேண்டும்" என அனுப்பியிருந்தார்.

ஊடகவியலாளர் அரசாங்க ஊடக அடையாள அட்டை வைத்திருந்த போதும், அதனை ஏற்க மறுத்து, மாவட்ட ஊடக அமையத்தின் உறுதிப்படுத்தல் அவசியம் எனத் தவிசாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதனால் அரசாங்க அடையாள அட்டை இருந்தும் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்து ஊடக வட்டாரங்களில் கேள்விகள் எழுந்துள்ளன. "இது தவிசாளரின் அறியாமையா? அல்லது ஊடகவியலாளர்களை உள்நோக்கத்துடன் தடுக்கும் முயற்சியா?" என்ற சந்தேகம் நிலவுகிறது.

# 29ஆவது நாளாக நேற்றும் திருகோணமலையில் தொடர் போராட்டத்தில் முத்து நகர் விவசாயிகள்



**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் நேற்றுப் புதன்கிழமையுடன் 29 ஆவது நாளாக தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களது விவசாய காணிகள் அபகரிக்கப்பட்டு தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்டமையை அடுத்து திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கு சாதகமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனத் தெரிவிக்கும் முத்து நகர் விவசாயிகள் தற்போதைய நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து, அன்றாட ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விவசாயிகள் தங்களின் சுமார் 800 ஏக்கர் நெற் செய்கை விவசாயம் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பிரதமரினால் இரண்டாம் கட்டத் தீர்வுக்கான வாக்குறுதி வழங்கப்பட்ட நிலையில் அதற்காக இன்னும் 04 நாள்களே உள்ளன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

'விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு!', '53 வருட காலமாக விவசாயம் செய்து வந்த நிலம் எங்கே?' ,'எங்களை வாழ விடு!' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது மழை பெய்யக் கூடிய நிலையிலும் மேகங்கள் கறுத்த நிலையிலும் கூட போராட்டத்தில் தொடர்ந்தும் முத்து நகர் ஒன்றிணைந்த விவசாயிகள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘விழிக்குறைக்கு வழித்துணையாம் எம் வெண் பிரம்பு’ இத்தொனிப்பொருளில் வெண் பிரம்பு தினம் நேற்று

## மகிழடித்தீவில் உள்ள கலாசார மண்டபத்தில் அனுஷ்டிப்பு









(வாலகிருஸ்ணா)

தினமும் பல்வேறு சவால்களுடன் கண்பார்வைகள் அற்றவர்கள் வெள்ளைப் பிரம்புடன் பயணிக்கின்றனர் என விழிப்புலனற்றவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் நேற்றாகும். ‘விழிக்குறைக்கு வழித்துணையாம் எம் வெண் பிரம்பு’ என்னும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு தரினம் விழிப்புலனற்றோர் பாடசாலையும் மண்முனை தென் மேற்கு பிரதேசசபையும் இணைந்து ஏற்பாடுசெய்த நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தினை முன்னிட்டு மண்முனை தென் மேற்கு பிரதேசசபையிலிருந்து கொக்கட்டிச்சோலை சந்தி வரையில் பெரும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் தரினம் விழிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்கள், ஏனைய பாடசாலைகளின் மாணவர்கள்,ஆசிரியர்கள்,பொது மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

வெள்ளைப்பிரம்புகளை ஏந்தியவாறு பெரும் எண்ணிக்கையா விழிப்புலனற்றவர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு தரினம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் தலைவர் நா.இதயராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மண்முனை தென் மேற்கு பிரதேசசபை தவிசாளர் இ.கிரேஸ்குமார்,பட்டிப்பளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.ரமேஸ், மண்முனை தென் மேற்கு பிரதேச கோட்டக்கல்வி அதிகாரி மூ.உதயகுமாரன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மகிழடித்தீவில் உள்ள கலாசார மண்டபத்தில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் விழிப்புணர்வற்றோரின் பல்வேறு நிகழ்வுகளுடன் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

வெள்ளைப்பிரம்பின் முக்கியத்துவம் தொடர்பிலான பல்வேறு உரைகளும் இடம் பெற்றன. இதன்போது பல்வேறு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

விழிப்புலனற்றவர்கள் வீதிகளில் பயணிக்கும்போது தினமும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் என இங்கு கருத்துத் தெரிவித்த விழிப்புலனற்றவர்கள் தெரிவித்தனர்.

போக்குவரத்துச் செய்வதற்கான வீதிகளின் ஓரங்களில் வந்த. நின்றால் எந்த போக்குவரத்து பஸ்களும் தங்களை கண் டுகொள்வதில் லையெனவும் வெள்ளைப்பிரம்புடன் நிற்பதைக் கண்டாலே ஏற்றாமல் செல்லும் நிலையே இன்றும் காணப்படுவதாகவும் அவ்வாறு ஏற்றிச்சென்றாலும் தங்களுக்கு முறையான மரியாதைகள் கிடைப்பதில்லையெனவும் கவலை தெரிவித்தனர்.

வீதிகளில்வெள்ளைப்பிரம்புடன் செல்பவர்களுக்கு அருகில் சென்று வாகனங்கள் அதிக ஒலியெழுப்பும் நிலைமைகள் காணப்படுகின்றன. இதனால் பெருமளவில் மனரீதியாக விழிப்புலனற்றவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். வீதிகளில் செல்லும் போது அருகில் வந்து ஒலியெழுப்புவதனால் சிலவேளைகளில் தடுமாறி விழும் நிலைமையும் காணப்படுகின்றது. இது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

அக்கரைப்பற்று வங்கியொன்றில் வங்கிக்கணக்கொன்றை வைத்திருப்பவர் மட்டக்களப்பில் உள்ள வங்கியில் அந்த கணக்கிலிருந்து பணம் பெறமுடியாத நிலையிருப்பதாகவும் ஏனையவர்கள் அதனைப்பெறும்போது தாங்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

கண்பார்வையற்றவர்களின் ஒவ்வொரு பிரச்சினையையும் ஒவ்வொரு விடயங்களையும் ஊடகங்கள் மற்றவர்களுக்கு எடுத்துச்செல்லவேண்டும். எங்களது விடயங்களை ஊடகங்கள் கண்டுகொள்வது குறைவானதாகவேயிருக்கின்றன. விழிப்புலனற்றவர்களின் பிரச்சினைகளை சமூகத்திற்கு கொண்டு செல்லும் பணிகளை ஊடகங்கள் செய்யவேண்டும். - என்ற கோரிக்கைகளை அவர்கள் இதன்போது முன் வைத்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.10.2025


மேஷம்

இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.


ரிஷபம்

இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.


மிதுனம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கடகம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.



சிம்மம்

இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.


கன்னி

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.


துலாம்

இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.


விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.10.2025




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

# மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் பற்றி எரியும் குப்பை மேட்டினால் பாதிப்பு!

## சுகாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள்





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் மன்னார் நகர சபையினால் கொட்டப்பட்டு குவிக்கப்பட்ட கழிவு பொருள்களில் ஏற்பட்ட தீப் பரவல் நேற்றுப் புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்வதால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்திற்கு வருகை தந்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையிலான குழு நேற்று மாலை 6 மணியளவில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டது.

அப்போது அந்தப் பகுதி பாரிய புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. மேலும் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியூடாக வாகன போக்குவரத்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டது. சுவாசிக்க முடியாத வகையில் புகை மண்டலம் காணப்பட்டமையால் பல மணி நேரம் அந்த வீதியூடாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

நேற்றுக் காலையில் இருந்தே அப்பகுதியில் பாரிய புகை பரவல் காணப்பட்டமையால் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலைக்கு மாணவர்கள் செல்லவில்லை எனவும் தெரியவருகின்றது.

மேலும் பொது மயானத்திற்கு பின் பகுதியில் பல குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்கே வசிக்கின்ற பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய் மார் என அனைவரும் சுவாசப் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், காதர் மஸ்தான், மன்னார் நகர சபை தவிசாளர், உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரும் வருகை தந்து நிலமை யை நேரடியாக அவதானித்தனர்.

அச்சமயம் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் வருகை தந்து தாம் இதனால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரில் தெரியப் படுத்தினர். மக்களின் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் விதத்திலான நடவடிக்கையான இப்பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.